முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1370

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.06.2023, வெள்ளிக்கிழமை

1. ஞானியே கலியுகத்தைக் காக்கவந்த
ஞானபலம் கொண்ட தவசியே
கனிவுடன் ஆறுமுகன் யான் உந்தனுக்கு
கண்டுரைப்பேன் ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் ஆனி மாதம் 15 ம் நாள், 30.06.2023, வெள்ளிக்கிழமை)

2. ஆசிதனில் அரங்கன் சக்தியே இந்த உலகை
ஆற்றல்பட மாற்றி காத்தருளும்
வரமென தர்மவழிகளைக் கொண்டு வையகத்தை
அரங்கன் மகா சக்தியால்தான் மீட்க இயலும்
3. வளமுற அன்னதனால் கலியுகத்தார்
அரங்கனை பின்பற்றி வர
தளர்விலா பெருஞானம் கண்டு
தரணியிலே ஞானிகளாக ஆற்றல்கூடி
4. கூடியே உலகை மாற்றும்
அற்புத சக்திகள் ஆக
அரங்கனின் ஞானப்படைகளாக
அவதாரம் கொண்டு உலகோர்
5. அகிலமெங்கும் ஆற்றல்மிக்கவர்களாய் நிரம்பி
அற்புதம் கலியினில் நடத்தக்கூடும்
கூடவே அரங்கனே இந்த அற்புதம் நிகழ்த்த இருக்க
குருஅரங்கன் கொள்கை ஏற்றால் போதும்
6. ஈடேறும் உலகமெங்கும் ஞானத்தலைமை
எல்லாதிக்கும் ஞானவான்கள் நிரம்ப
தடையற ஞானசபை மாற்றமாக
தரணியில் கலியுகத்தில் ஞான ஆட்சி மலரும்

7. மலருகின்ற அற்புதத்தை
   மகத்துவம்பட அரங்கன் ஞானம் தரஇருக்க
   வலம் வந்து உலகோர் அரங்கன் குடில் நோக்கி
   வணங்கி வையகத்தில் ஆறுமுகன் அவதார அரங்கனே என
8. என வேண்டி எல்லா சேவைகளிலும்
   கலந்து கொண்டு உலகோர்
   உயர் சேவையாற்ற உத்தமமாய்
   இந்த கலியுகம் தேறி மாற்றம் காணும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–